முதன்மை மாவட்ட நீதிமன்றம், காஞ்சிபுரம்

| | | | | |
|---|---|---|---|---|
| வழக்கு எண் | L.A.O.P | 203 | of | 2024 |

2026–ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 27 –ம் நாளான இன்று

கோருரிமைதாரர் தரப்பில் சாட்சியின் வாக்குமூலமானது 1873–ம் ஆண்டின் 10வது வட்டத்தின் விதிமுறைகளுக்குட்பட்டு திருமதி.Logeshwari, Translator, என்பவரால் சட்டத்தின் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | கே.என் வரதராஜன் |
| தந்தை பெயர் | நாகப்பன் |
| கிராமம் | |
| தொழில் | |
| வயது | 59 |

நாள் 27 .02.2026 – எ.ம.சா.1 (CW1)

**முதல் விசாரணை**

நான் எனது தரப்பில் முதல் விசாரணக்கான பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. **எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ. 2 வரை சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.**

**குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் ஒன்றாம் பிரதிவாதி நிலை எடுப்பு அதிகாரி என்றால் சரிதான். அவரின் கீழ் அவரின் நேரடி கட்டுப்பாட்டில் நான் பணிபுரிகிறேன் என்றால் சரிதான். இதற்கு முன்பாக 1வது பிரதிவாதி சென்னை கன்னியாகுமரி இண்டஸ்ட்ரியல் காரிடர் என்ற

திட்டத்திற்கு நில ஆர்ஜித அதிகாரி என்று அழைக்கப்பட்டார். தற்பொழுது தனி மாவட்ட வருவாய் அலுவலர் நில எடுப்பு நெடுஞ்சாலை என்று அழைக்கப்படுகிறார் என்றால் சரிதான். அவர்களின் கீழ் மொத்தம் ஆறு அலகுகள் உள்ளது. நான் நான்காவது அலகில் பணிபுரிகிறேன். நான் காஞ்சிபுரம் மாவட்டத்தில் பணியாற்றியதால் காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடைபெற்ற மேம்பாட்டுகளை குறித்து எனக்கு தெரியும் என்றால் ஓரளவுக்கு தெரியும். பொதுவாக தொழிற்சாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் அதிகமாக இருக்கும் பட்சத்தில் அந்த பகுதியில் நில மதிப்பீடு என்பது மற்ற நிலங்களை காட்டிலும் அதிகமாக இருக்கும் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. வளர்ச்சி இருக்கும் என்றால் சரிதான். காஞ்சிபுரம் மாவட்டத்தில் திருப்பெரும்புதூரில் ஒட்டி மொத்தம் மூன்று சிப்காட் உள்ளது என்றால் சரிதான். வல்லம் மற்றும் வடகால் சிப்காட், திருபெரும்புதூர் சிப்காட் மற்றும் இருங்காட்டுக்கோட்டை சிப்காட் என்றால் சரிதான். 1971 ம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்சாலை வளர்ச்சி திட்டத்திற்காக சிப்காட் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. தற்போது தமிழ்நாட்டில் மொத்தம் 24 சிப்காட்டுகளும் ஆறு சிறப்பு பொருளாதார மண்டலமும் செயல்பட்டு வருகின்றன அதில் மேலே குறிப்பிட்ட மூன்று சிப்காட் திருப்பெரும்புதூர் நில ஆர்ஜித இடத்திற்கு மிக அருகில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சிப்காட்டை சுற்றிலும் நிறைய பன்னாட்டு நிறுவனங்கள் உள்ளது என்றால் சரிதான். நிலை ஆர்ஜித இடத்திற்கு விலை நிர்ணயம் செய்வதற்காக பிரிவு 15(2) அறிவிக்கை கொடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் 1.6 சுற்றளவில் உள்ள நிலங்களில் 157 கிரைய பத்திரங்களை நாங்கள் புள்ளிவிவரங்களாக காண்பித்துள்ளோம் என்றால் சரிதான். கோ.மா.சா. ஆ 3 முதல் கோ.மா.சாஆ 12 வரை உள்ள ஆவணங்கள் நாங்கள் மேற்படி

புள்ளி விவரங்களில் காண்பித்திருக்கும் ஆவணங்கள் தான் என்றால் சரிதான். அது வழிகாட்டு மதிப்பீடை பிரதிபலிக்கவில்லை. திருப்பெரும்புதூரில் இருந்து சிங்கப்பெருமாள் கோயில் செல்லும் சாலையில் மொத்தம் 20, 25 கிராமங்கள் இருக்குமா என்ற 15 கிராமங்கள் இருக்கும். வல்லம் கிராமத்தில் திருப்பெரும்புதூர் முதல் சிங்க பெருமாள் செல்லும் சாலைகளுக்கான அரசாங்க மதிப்பீடை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நிலங்களை ஆர்ஜிதம் செய்துதான் சாலை அமைத்துள்ளதால் சாலைக்களுக்கான வழிகாட்டு மதிப்பீடு தாக்கல் செய்ய முடியாது. சிங்கப்பெருமாள் திருப்பெரும்புதூர் சாலைக்கான வல்லம் கிராமத்தின் வழிகாட்டு மதிப்பீடு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்துள்ளேன். வல்லம் கிராமத்திற்கான சார் பதிவாளர் அலுவலகத்திலும் சந்தை மதிப்பு சம்பந்தமான ஆவணங்களை பெற்று இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சார் பதிவாளர் வழிகாட்டு மதிப்பீடு தான் வழங்குவார். நான் அதற்கான நடவடிக்கை எடுத்திருந்தால் சார் பதிவாளர் அதன் விவரங்களை கொடுத்திருப்பார் என்றும் நான் அதற்கான முயற்சி எடுக்கவில்லை என்றால் தவறு. மாதிரி நிலங்களுக்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆவணங்கள் கொடுக்கவில்லை ஆனால் இணைப்புகளை (Annexure) தாக்கல் செய்துள்ளேன்.2013 நில ஆர்ஜித சட்டத்தின் படி நான் எந்த பகுதியில் நிலம் கையகப்படுத்தப்படுகிறது அந்த பகுதியில் உள்ள நிலத்தின் சராசரி மதிப்பீடை கணக்கில் கொண்டு தான் இழப்பீடு நிர்ணயிக்க வேண்டும் என்றும் அவ்வாறு சட்டப்படி செய்யாமல் தோராயமாக சர்வே எண் அடிப்படையில் இழப்பீடு நிர்ணயித்தது சட்டப்படி தவறு என்றால் சரியல்ல. பிரிவு 15(1) அறிவிக்கை வெளியிட்டவுடன் இழப்பீடு

தொகையை நாங்கள் பயனாளிகளுக்கு வழங்கவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு கொடுக்கவில்லை என்றால் வட்டியுடன் சேர்ந்த தொகையை பயன்பாடுகளுக்கு வழங்கி இருக்க வேண்டும் என்றும் அவ்வாறான தொகை இந்த வழக்கில் வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. திட்டமானது ஏற்கனவே இருக்கக்கூடிய சாலையை அகலப்படுத்துவது தான் என்றால் சரிதான். இந்த திட்டத்திற்காக திருப்பெரும்புதூர் கிராமத்திற்கு இழப்பீடு சில நில உரிமையாளர்களிடம் ⅓ ல் மேம்பாட்டு செலவுகளாக பிடித்தம் செய்து இருந்தோம் அதன் பிறகு எங்களுடைய நில நிர்வாக ஆணையர் ஒரு உத்தரவின் பேரில் குறுகிய நிலை எடுப்பு திட்டங்களுக்கு மூன்றில் ஒரு பங்கு மேம்பாட்டு கட்டணம் பிடித்தம் செய்யக்கூடாது என்று சுற்றறிக்கை அனைத்து மாவட்டங்களுக்கும் அனுப்பப்பட்டு அதற்கடுத்து அனைத்தும் நாங்கள் மேம்பாட்டு செலவுகள் பிடித்தம் செய்யவில்லை என்றால் சரிதான். அறிக்கை செய்யப்பட்ட தேதி அன்றே முறையாக ஆவணங்களை பரிசீலித்து இழப்பீடு தொகை கொடுத்திருந்தால் ஒரு சதுர அடி ரூபாய் 3 ஆயிரம் நிர்ணயித்துக் கொடுத்திருக்க வேண்டும் என்றும் ஆகவே நான் நில இழப்பீடு உரிமையாளருக்கு ஒரு சதுர அடிக்கு ரூபாய் 3 ஆயிரம் மட்டும் பிரிவு 80 கீழ் உள்ள பலன்களை புதிய 2013 சட்டத்தின் படி நாங்கள் வழங்க கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல. உரிய முறையில் நிர்ணயம் செய்து இழப்பீடு வழங்கியுள்ளோம்.

**மறு விசாரணை இல்லை.**

(Sd/- Deepthi Arivunithi, M.L.,)
Principal District Judge,
Kancheepuram.